புதுச்சேரி அரசு
போக்குவரத்துத் துறை

எண்: 41/TD/TC/PA/2015/4

புதுச்சேரி, தேதி : 24/04/2015

## செய்திக் குறிப்பு

### அனைத்து போக்குவரத்து வாகனங்களுக்கும் சாலை வரி செலுத்துவோருக்கான சிறப்பு முகாம் புதுச்சேரி போக்குவரத்துத் துறையில் ஏற்பாடு

புதுச்சேரி எல்லைக்குட்பட்ட சாலைகளை பயன்படுத்துவதற்கு ஒவ்வொரு ஆண்டும் சாலை வரி கட்டுவோர் அதனை தவறாமல் செலுத்த வேண்டும். அனைத்து வகை சுற்றுலா மற்றும் சரக்கு போக்குவரத்து வாகனங்களை இயக்குவதற்கு 2015-16 ம் நிதி ஆண்டுக்கான சாலை வரி செலுத்துவதற்கு எதிர்வரும் 30.04.2015 கடைசி நாள் என்பது அனைத்து போக்குவரத்து வாகன உரிமையாளர்களும் அறிந்த ஒன்றே. போக்குவரத்து வாகனங்களுக்கான சாலை வரிகளை செலுத்த வரும் 27.04.2015 முதல் 30.04.2015 வரை புதுச்சேரி போக்குவரத்துத் துறை அலுவலகத்தில் சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

2015-16 ம் நிதி ஆண்டுக்கான சாலை வரியினை வரும் 30.04.2015-ம் தேதிக்குள் செலுத்தத் தவறினால், அதன் பின்னர் செலுத்தப்படும் வரித்தொகையுடன் அபராதத் தொகையும் சேர்த்து வசூல் செய்யப்படும். மேலும், வரி செலுத்தாமல், 30.04.2015-ம் தேதிக்கு பின்னர் புதுச்சேரி எல்லைக்குள் இயக்கப்படும் அனைத்து வாகனங்களும், பர்மிட் இல்லாமல் இயக்கப்படும் வாகனங்களாக கருதப்பட்டு அதற்குறிய அபராதத்துடன் காலதாமதமாக வரி செலுத்தியமைக்கான அபராதமும் சேர்த்து வசூல் செய்ய நேரிடும்.

தமது வாகனங்களுக்கு இதுவரை வரி செலுத்த தவறியவர்கள் மற்றும் வரிபாக்கி உள்ளவர்களும் இவ்வாய்ப்பினை பயன்படுத்தி உடனடியாக சாலைவரியினை செலுத்தி போக்குவரத்துத் துறையின் மேல் நடவடிக்கையினைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(எஸ்.டி. சுந்தரேசன்)
போக்குவரத்து ஆணையர்

GOVT. OF PONDICHERRY ★ TRANSPORT DEPARTMENT ★